
# திராவிடத்தால் வாழ்கிறோம்

855

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

13

# ‘ராஜா ராணி’: ஒரு படத்துக்குள் மூன்று பாடங்கள்!

படங்கள் உதவி : ஞானம்







**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

கலைஞரின் ‘ராஜா ராணி’ திரைப்படம் மிகவும் மகிழ்ச்சியான கலகலப்பான படமாகவே தொடங்கும். நாயகி ராணி ஒரு பால்ய விதவை என்பது தெரியவந்து, அவளது காதலும் திருமண ஆசையும் அவளது தந்தையால் வலுக்கட்டாயமாக முறியடிக்கப்படும் போது, படம் சோகமாக மாறுவதுடன், ராணியின் தந்தை ஞானக்கண்ணுவின் மீது நமக்கு (பார்வையாளர்களுக்கு) கோபமும், அவரது பிற்போக்கான நம்பிக்கைகளின் மீது வெறுப்பும் ஏற்படும்.

ஆனால், திரைப்படம் எடுக்கப்பட்ட காலகட்டத்துக்கு முன்னர், (1956-இல்) குழந்தைத் திருமணமும், மாப்பிள்ளையாகும் சிறுவன் நோய்வாய்ப்பட்டு எதிர்பாராமல் இறந்து போனால், அந்த சிறுமி வாழ்நாளெல்லாம் விதவையாகப் பூவும், பொட்டும், மகிழ்ச்சியும் இன்றி, துன்பத்தில் உழல வேண்டும் என்பதும் தான் மனுதர்மம் உருவாக்கி வைத்திருந்த பண்பாட்டுச் சூழல். அந்தப் பழமைவாத சிந்தனையின் மீது, ‘ராஜா ராணி’ திரைப் படத்தின் வசனங்கள் சவுக்கடிபோல அமைந் திருக்கும். திரைப்படத்தில் இடம்பெற்றுள்ள இரண்டு நாடகங்களுக்காக, கலைஞர் எழுதிய உரையாடல்கள் இன்றும் உயிரோட்டமாக பேசப்படும் அதிசயத்தைக் காணலாம்.

### உன்னையே நீ எண்ணிப்பார்!

‘சாக்ரடீஸ்’ நாடகத்தில் இடம்பெறும், “ஏற்றமிகு ஏதேன்ஸ் நகரத்து எழில்மிக்க வாலிபர்களே! நாற்றமெடுத்த சமுதாயத்தில் நறுமணம் கமழ்விக்க, இதோ சாக்ரடீஸ் அழைக்கிறேன். ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்” என்று தொடங்கும் வசனம், அன்றைக்கு பெரியாரை நினைவூட்டும் அரசியலாக இருந்தது.

சாக்ரடீஸ்: புதிதாக நான் என்ன சொல்லப் போகிறேன்? உன்னையே நீ எண்ணிப் பார்! எதையும் எதற்காக? ஏன்? எப்படி? என்று கேள், அப்படிக் கேட்டதால்தான் சிலை வடிக்கும் இந்தச் சிற்பி சிந்தனைச் சிற்பியாக மாறினேன். அவர் சொன்னார், இவர் சொன்னார் என்று நம்பி அறிவிழந்து தடுமாற்றம் அடைய வேண்டாம். எவர் சொன்ன சொல்லானாலும், அதனை உந்தன் இயல்பான பகுத்தறிவால் எண்ணிப் பார்ப்பாய். அதைத்தான் உனக்கும் இந்த நாட்டுக்கும் சொல்ல விரும்புவது. விசம் அழைக்கிறது என்னை! இந்தக் கிழவன் கிரேக்க நாட்டு இளைஞர்களைக் கெடுப்பதாக யாராவது உண்மையாக, உளமார நினைத்தால், அவர்கள் என்னை மன்னிக்கட்டும் வருகிறேன், வணக்கம். ஏ, ஜெகமே! சிந்திக்கத் தவறாதே உன்னையே நீ அறிவாய்! உன்னையே நீ அறிவாய்! என்று சாக்ரடீஸ் சாலையில் நின்று பேசுவது, பெரியாரன்றி வேறு யாரை நினைவூட்டும்?

### வந்துவிட்டான், குலக்கொழுந்து!

அதுபோல, படத்தின் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ள ‘சேரன் செங்குட்டுவன்’ நாடகம், தமிழர்களின் காதலையும் வீரத்தையும் பேசுவதுடன் வடவர் எதிர்ப்பையும், தமிழின் சிறப்பையும் பேசும்.

சேரனின் அரண்மனையில், சேரன் செங்குட்டுவனும் (சிவாஜி) அரசி வேண்மாளும் (ராஜசுலோசனா) உரையாடிக் கொண்டிருக் கின்றனர். செங்குட்டுவன் சங்க காலத் தமிழ்த்தாய் ஒருத்தியின் வீரத்தைப் பற்றி கவிதை நடையில் எடுத்துச் சொல்லும் உரையாடல் ஒன்று, உயிரோட்டமான காவிய உரையாடல். அந்த நீண்ட வசனத்தினை சிவாஜி கணேசன் பேசுகிறார். அதன் இறுதிப்பகுதி மட்டும் இது...

“சேரன் செங்குட்டுவன்: .......... வந்துவிட்டான் குலக்கொழுந்து, இன்ப விளக்கு எரிந்துகொண்டே கூறுகின்றாள், எதிரிகளின் படையெடுப்பால் நம் குடும்பம் உதிர்த்து விட்ட மரமாகப் போனதடா தம்பி. கவலை இல்லை. களம் சென்றார் மாண்டார். ஆனால், இந்த நிலம் உள்ள வரையில் மானம் காப்போர் என்ற பெயர் கொண்டார். மகனே, நீயும் உன் தோளிலே பலம் உள்ள வரையில் பகையைச் சாடு பரணிபாடு, இது உன் தாய்த் திரு நாடு, உடனே ஓடு! எனத் தாவி அணைத்துத் தளிர் மகன் தன்னைச் சீவி முடித்து சிங்காரித்து, ரத்தக்காவி படிந்த வாள் கொடுத்து சென்று வா, மகனே! செருமுனை நோக்கி என்று வாழ்த்தி அனுப்பிவிட்ட திருவிடத்துக்காட்சி தன்னைப் போற்றிப் பாடாதார் உண்டோ திருமகளே! இப்பூவுலகில்?” என நீளும் அந்த உரையாடல்.

வரலாற்றை அறிதல், பண்பாட்டுப் பெருமையைப் பேசுதல் மட்டுமல்ல; பிற்போக்குக் கருத்துகளை சாடும் புரட்சிகரமான வசனங்களும் படத்தில் இருக்கின்றன.

### தவழ்ந்த குழந்தை!

ராஜாவைக் காதலிப்பதைத் தனது தந்தை ஞானக்கண்ணுவிடம் தயங்கித் தயங்கி ராணி (பத்மினி) தெரிவிக்கும் காட்சியைப் பார்க்கலாம்.

நாயகியின் தந்தை ஞானக்கண்ணு, தன் மகள் குழந்தைத் திருமணம் செய்தவள் என்பதை விளக்கும் காட்சியில், ஞானக்கண்ணு ஒரு பெட்டிக்குள், பெட்டியை எடுத்து, அதில் இரண்டு குழந்தைகள் கழுத்திலே மாலை போட்டுக் கொண்டு இருப்பதைக் காட்டி “நீ விதவையம்மா, விதவை, பால்ய விதவை” என்பார்.

ராணி: விதவையா? அப்பா விண்ணோக்கி வளர்ந்த என் ஆசைக் கோட்டையை ஒரு நொடியில் தகர்த்துத் தூளாக்கி விட்டீர்களே அப்பா. அரும்புப் பிராயத்திலே என் வாழ்வை அழித்துவிட்டு, சாறற்றச் சக்கையாக இந்தச் சடலத்தை ஏனப்பா உலவவிட்டீர்கள்? அறியாப் பருவத்திலே கல்யாணம், தாலி கட்டியவன் இறந்து போன நேரத்தில் நான் தவழ்ந்து கொண்டிருந்தேன். அதற்குத் தண்டனை இப்போதா? சரிதானா அப்பா இந்தத் தீர்ப்பு? என அப்பாவுக்கும் மகளுக்கும் நீண்ட வாதம் நடைபெறும்.

“தாலி கட்டியவன் இறந்துபோன நேரத்தில் நான் தவழ்ந்து கொண்டிருந்தேன்” என்ற தனது ஒற்றை வசனத்தின் மூலம் பெண் இனத்தின் மீது சுமத்தப்பட்டிருந்த நூற்றாண்டு காலக் கொடிய வழக்கத்தினை உணர்த்தி விடுவார் கலைஞர்.

### மறுமணத்துக்கு சம்மதம்!

அதேபோல, ராணியின் மீதான தனது இச்சையின் காரணமாக, நாயகன் ராஜாவிடம் இருந்து ராணியைப் பிரித்துவிட வேண்டும் என்ற தீய எண்ணத்தில், ராணி ஒரு விதவை என்கிற செய்தியை ராஜாவிடம் போய் பாபு சொல்லும் காட்சியில் பாபுவுக்கும் ராஜாவுக்கும் இடையில் நடைபெறும் உரையாடலில்...

“ராஜா: பாபு, ராணி விதவையாகத்தான் இருக்கட்டுமே அதனால் என்ன? பொன்மணியும் பூப்பொட்டும் போய் விடலாம். என் கண்மணியின் இருதயத்தின் இளமை தன்னை விதவைக்கோலம் விழுங்கியதுண்டோ?

பாபு : அப்படியானால் உன் மனம்?

ராஜா: மறுமணத்திற்குச் சம்மதிக்கிறது. ஆமாம், மறுமணத்திற்குச் சம்மதிக்கிறது. என்று ராஜா சொல்கிறான்.

இந்த இடத்தில்தான், கலைஞர் என்றைக்கும் பெரியாரின் மாணவர், மானமுள்ள சுயமரியா தைக்காரர் என்பதைத் தனது வசனத்தின் மூலம் மீண்டும் எடுத்துக் காட்டுகிறார்.

கலைஞரின் அறிவாற்றலை நினைக்கும்போது மலைப்பாக உள்ளது. ஒரே மனிதர் எப்படி இத்தனை துறைகளில் புலமை பெற்று விளங்க முடியும்? ஒரே படத்தில் சங்க இலக்கியத்தில் உச்சத்தைத் தொட்டு கவிதை நடையில் வசனம் எழுதும் அதே நேரம், கிரேக்கத் தத்துவ ஞானி சாக்ரடீசின் தத்துவத்தை, பெரியார் தத்துவத்துடன் இணைத்து மிக நுணுக்கமாக மக்களுக்குப் புரியும்படி எளிமையாக அளிக்கிறார்.

கலைஞர், பெரியாருக்கு எழுதிய அந்த வசனம் கலைஞருக்கும் பொருந்தும். ஆம், இன்னும் ஆயிரம் ஆண்டுகள் தேடினாலும், இன்னொரு கலைஞர் நமக்குக் கிடைக்கப் போவதில்லை.

**...காட்சி விரியும்**

> **வரலாற்றை அறிதல், பண்பாட்டுப் பெருமையைப் பேசுதல் மட்டுமல்ல; பிற்போக்குக் கருத்துகளை சாடும் புரட்சிகரமான வசனங்களும் படத்தில் இருக்கின்றன.**

## ‘இதழியல் களத்தில் பெரியார்!’ - புதிய நூல்




காங்கிரஸில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்திப் போராடிக் கொண்டு இருந்த காலத்திலேயே ‘குடி அரசு’ இதழைத் தொடங்கியவர் தந்தை பெரியார். “நம் நாட்டில் தமிழர்களில் எத்தனையோ யோக்கியர்கள், விவேகிகள், கெட்டிக்காரர்கள் இருந்தாலும், அவர்கள் பொது ஜனங்களுக்குத் தெரியக் கூடாதவராய் இருக்கிறார்கள். இதன் காரணம் தமிழர்களுக்குச் செல்வாக்கும் சக்தியுமுள்ள பத்திரிகையில்லை. 100-க்கு 90-க்கும் மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கூட்டத்தாருக்கு, தங்கள் நாட்டில் தங்களைப் பற்றி தங்கள் சமூகத்தாரே அறிந்துகொள்ள ஒரு சாதனம் இல்லை என்றால், இதைப் பற்றி என்ன நினைப்பது?” என இதழியலின் அவசியத்தை 02.08.1925 குடிஅரசில் வலியுறுத்தினார் பெரியார்.

ஆனால், அந்தக் குறைகளை ‘குடிஅரசு’, ‘புரட்சி’, ‘பகுத்தறிவு’, ‘உண்மை’, ‘விடுதலை’, ‘ரிவோல்ட்’, ‘மாடர்ன் ரேசனலிஸ்ட்’ எனப் பல்வேறு இதழ்களைத் தொடங்கி, பார்ப்பனரல்லாதோருக்கான இதழியல் தளத்தை வெகுஜன மக்கள் மத்தியில் சாத்தியப்படுத்தியவர் பெரியார். தமிழ்நாட்டின் மிக நுணுக்கமான பார்ப்பனர் – பார்ப்பனரல்லாதோர் அரசியலைப் புரிந்துகொள்ள பெரியாரின் எழுத்துக்கள், பேச்சுக்களை அறிந்துகொள்வது அவசியம்.

‘குடிஅரசு’, ‘விடுதலை’ இதழ்களை ஆய்வுசெய்து அறிந்து கொள்ள வேண்டிய அந்தச் செய்திகளை ‘இதழியல் களத்தில் பெரியார்’ என 1,500 பக்கங்களைக் கொண்ட 2 தொகுதி நூல்களாகத் தொகுத்திருக்கிறார் பேராசிரியர் இரா.சுப்பிரமணி. கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் வெளியீடாக உருவாகியுள்ள இந்நூலின் முன்பதிவு தொடங்கியுள்ளது. ரூ.2,000 மதிப்புகொண்ட இந்நூலை, முன் வெளியீட்டுத் திட்டத்தில் ரூ.1,500-க்குப் பெறலாம். ஜூலை முதல் வாரத்தில் புத்தகம் அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்பதிவு செய்ய கடைசி நாள்: ஜூன் 20, 2025.

தொடர்புக்கு: 81229-46408, 96002-94284

## ஃப்ளாஷ்பேக்



## உள்ளாட்சியில் மகளிருக்கு வழிவகுத்த தலைவர்!



எஸ்.லலிதா சண்முகசுந்தரம்

1996-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், உள்ளாட்சியில் மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதன்படி, முதன்முதலாக, ஆரணி நகராட்சியில் 21-வது வட்டத்தில் நகர மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். கழகம் நடத்திய போராட்டம், ஆர்ப்பாட்டம், சிறை நிரப்புதல் என அனைத்துக் களங்களிலும் கலந்துகொண்டேன். 2001-இல் ஜனவரி மாதம் நம் தளபதி அவர்கள் ஆரணி நகரில், கோட்டையில் கழகக் கூட்டத்தில் பங்கேற்று, மகளிரை வாழ்த்தியும், பாராட்டியும் பேசினார். அன்று நாங்கள் தளபதியாருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**– எஸ்.லலிதா சண்முகசுந்தரம், வடக்கு மாவட்ட மகளிர் அணித் தலைவர், திருவண்ணாமலை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மகாராஷ்டிர மாநில எம்.பி.க்கள்!

1959-ஆம் ஆண்டில், கோவை மாவட்ட தி.மு.க. 3-வது மாநாடு கோபிச்செட்டிப்பாளையத்தில் ஜூலை 5, 6 தேதிகளில் நடைபெற்றது. அறிஞர் அண்ணா, நாவலர் உள்ளிட்ட முன்னணியினர் பங்குகொண்டு சிறப்புரையாற்றினர். கலைஞரின் ‘உதயசூரியன்’ நாடகம் நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு மகாராஷ்டிர மாநில உழவர் தொழிலாளர் கட்சி எம்.பி.க்கள் பார்வையாளர்களாக வந்திருந்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131